உ

கடவுள் துணை.

அஞ்ஞானவைரி

என்னும்

மெஞ்ஞானத்தங்கம்.

இஃது,

சிறுமணவூர்

முனிசாமி முதலியாரால்

இயற்றப்பட்டு,

SIVAGAMY VILASAM PRESS

தமது

சென்னை சூளை

சிவகாமிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1908.

58

கடவுள் துணை.

மெஞ்ஞானத்தங்கம்.

மெஞ்ஞானத்தங்கம் மேலானத்தங்கம்
அஞ்ஞானத்தங்கமெல்லாம் ஞானத்தங்கம்
அனித்தியமாகுமடி. க

தங்கத்திற்றங்கம் தனித்தங்கமொன்றிருக்க
பித்தளைத்தங்கத்திற்கு ஞானத்தங்கம்
பித்தாசைக் கொண்டாயடி. உ

பொன்னிலனேகம் பூஷணந்தானாகும்
தன்மைபோல்தெய்வமடி ஞானத்தங்கம்
தர்க்கமுதவாதடி. ௩

சாஸ்திரவேதம் சகலமுந்தான்பேதம்
மூர்த்தியொருத்தனடி ஞானத்தங்கம்
முதல்வனவன்றானடி. ௪

வேதமனேகம் வேடிக்கைதானாகும்
பேதமதில்நுழைந்தால் ஞானத்தங்கம்
பிறப்புக்கிடமாமடி. ௫

ஆத்திச்சுவடி அதையேகடைப்பிடிநீ
வேத்துச்சுவடியெல்லாம் ஞானத்தங்கம்
விபரீதமாகுமடி. ௬

அன்னைமுதற்றெய்வம் அப்பன்மறுதெய்வம்
பின்னைகுருதெய்வமடி ஞானத்தங்கம்
பிடிவாதஞ்செய்வாயடி. எ

அண்டமும்மாயம் அகிலமுந்தான்மாயம்
பிண்டத்தில்வந்ததெல்லாம் ஞானத்தங்கம்
பொய்யாய்முடியுமடி. அ

பிறப்புப்பிறப்பென்று பேசிமகிழ்வதெல்லாம்
இறக்குந் தொழிலுக்கல்லோ ஞானத்தங்கம்
எல்லாம் பிறந்தோமடி. ௯

எரும்புகடையானை யெண்பத்துநான்குவித
பிறப்பும்பிரமமடி ஞானத்தங்கம்
பேதமென்றெண்ணுதடி. ௧௦

வேதபுராணம் விபரீதஞானம்
ஆதாரமில்லையடி ஞானத்தங்கம்
எல்லாம்மாராட்டமடி. ௧௧

ஒன்றுக்குஒன்று உயர்ஞானம்சொன்னாலும்
கண்டுபிடிப்பதற்கு ஞானத்தங்கம்
கருத்திலடங்காதடி. ௧௨

ஏட்டிலெழுதிவைத்த யெண்கோடிஞானமெல்லாம்
கூட்டுக்குதவாதடி ஞானத்தங்கம்
குருவருள்வேணுமடி. ௧௩

ஏட்டுக்கழகாக எழுதியஞானமெல்லாம்
பாட்டுக்கழகேயல்லால் ஞானத்தங்கம்
பசிதீரமாட்டாதடி. ௧௪

சாஸ்திரங்கற்றாலும் சமுசாரம்விட்டாலும்
சூஸ்திரங்காட்டுதற்கு ஞானத்தங்கம்
சுயகுருவேணுமடி. ௧௫

குருவில்லாஞானம் கோடிப்படித்தாலும்
வடிவில்லாப்பெண்ணதுபோல் ஞானத்தங்கம்
வாழ்க்கைக்குதவாதடி. ௧௬

எட்டாதவீண்கோலம் எதுக்கடிஜாலம்
அட்டாங்கயோக மெல்லாம் ஞானத்தங்கம்
அவத்தைக்குமூலமடி. ௧௭

யோகநிலைநின்றாலும் உண்மைநிலைகண்டாலும்
தேகநிலையாவதற்கு ஞானத்தங்கம்
சித்தநிலைவேணுமடி. ௧௮

பேச்சையடக்காமல் பேரின்பஞ்சேராமல்
மூச்சையடக்கிக்கொண்டால் ஞானத்தங்கம்
முதலுக்கேமோசமடி. ௧௯

எந்தநிலைகண்டாலும் ஈனநிலையற்றாலும்
சிந்தைதலைநில்லாவிட்டால் ஞானத்தங்கம்
தெய்வநிலைகாணாதடி. ௨௦

மூச்சையடக்கி முழுகிக்கிடந்தாலும்
பேச்சுக்கிடந்தானடி ஞானத்தங்கம்
பலனென்றுமில்லையடி. ௨௧

காற்றையடக்கி கண்மூடிக்கொண்டாலும்
கூற்றன்விடமாட்டானடி ஞானத்தங்கம்
குருவேஷமேதுக்கடி. ௨௨

வாய்ஞானம்பேசுகிற வம்பர்கள்ஞானமெல்லாம்
பேய்ஞானமாகுமடி ஞானத்தங்கம்
பின்னென்றுமில்லையடி. ௨௩

கல்வித்திறத்தால் கடைஞானம்சொன்னாலும்
சொல்லுக்குறுதியுண்டோ ஞானத்தங்கம்
சுகமொன்றுமில்லையடி. ௨௪

உள்ளபடிஞானம் உண்மையுரைத்தாலும்
கள்ளஜெனங்களடி ஞானத்தங்கம்
கருத்தில்பொருந்தாதடி. ௨௫

வெறியர்குடியரைப்போல் விளையாடும்பிள்ளையைப்போல்
பெரியோர்கள்செய்கையடி ஞானத்தங்கம்
பாஷையும்வேறுமடி. ௨௬

காலமொருமூன்றும் கருத்திலுணர்ந்தாலும்
ஞாலத்திற்சொல்லாரடி ஞானத்தங்கம்
நல்லோர்பெரியோரடி. ௨௭

தலையைச்சிரைத்தாலும் சடையைவளர்த்தாலும்
நிலையிற்றரிக்காதவர் ஞானத்தங்கம்
நடைபிணமாகுமடி. ௨௮

சாத்திரங்கற்றாலும் சதுர்வேதந்தீர்ந்தாலும்
சோத்திலடக்கமடி ஞானத்தங்கம்
சுயஞானியாகாரடி. ௨௯

வஞ்சம்பொறாமை வலதுசொல்ஆராமை
கொஞ்சமில்லாதிருந்தால் ஞானத்தங்கம்
குருக்கள்கிடைப்பாரடி. ௩௦

கபடுபொய்சூது களவுபிடிவாது
அகடுயில்லாதிருந்தால் ஞானத்தங்கம்
ஆசான்கிடைப்பாரடி. ௩௧

காற்றையடக்கும் கருதேடிக்கொண்டவர்கள்
சோற்றைவிரும்பாரடி ஞானத்தங்கம்
சுயஞானம்பேசாரடி. ௩௨

செத்தும்சாகாதவர்போல் சித்துவிளையாடுகிற
முத்தர்கிருபையிருந்தால் ஞானத்தங்கம்
முத்திகிடைக்குமடி. ௩௩

மாண்டவர்போலே மயக்கமதுகாட்டி
தாண்டவம்செய்வாரடி ஞானத்தங்கம்
தன்னையறிந்தோரடி. ௩௪

தன்னையறிந்த தலைவரடிபிடித்தால்
என்னகுறைச்சலடி ஞானத்தங்கம்
எல்லாங்கைக்கூடுமடி. ௩௫

சம்சாரத்தொல்லை சாதிப்பாராருமில்லை
அம்சமதுபோலிருந்து ஞானத்தங்கம்
அசையாமல்கேளடியோ. ௩௬

துக்கசமுசாரம் தொல்லையிதிலனேகம்
எக்காலமானாலுந்தான் ஞானத்தங்கம்
ஈடேரமாட்டாயடி. ௩௭

ஆண்டிகள்சன்யாசி அழகுப்பரதேசி
பூண்டகாஷாயமெல்லாம் ஞானத்தங்கம்
பொதிச்சுமையாகுமடி. ௩௮

காலமகுத்துவத்தால் கஞ்சிகிடைக்காமல்
கோலமெடுத்தாரடி ஞானத்தங்கம்
குருவேஷங்கொண்டாரடி. ௩௯

குடியர்வெறியர் குடும்பநிலையில்லாதோர்
தடியர்மடையரெல்லாம் ஞானத்தங்கம்
சன்னியாசியானாரடி. ௪௦

பெண்டுமெரித்தோர்கள் பிழைக்கவடிகாணாதோர்
சண்டையில்வீடுவிட்டோர் ஞானத்தங்கம்
சாமியாரானாரடி. ௪௧

கல்வியறிவில்லாதோர் கைத்தொழிலிற்றேராதோர்
மெல்லமெல்லசாமியென்று ஞானத்தங்கம்
மின்முடிவளர்த்தாரடி. ௪௨

கொஞ்சம்பொருளிருந்தால் குடும்பத்தையேன்விடுவார்
பஞ்சம்பிழைப்பதற்கு ஞானத்தங்கம்
பரதேசியானாரடி. ௪௩

சோம்பலுடையோரும் சூதாடும்வம்பர்களும்
சாம்பசிவன்போலவே ஞானத்தங்கம்
சடையைவளர்த்தாரடி. ௪௪

சடையைவளர்த்தவரும் தலைமொட்டையானவரும்
கோடிபேர்கூடினாலும் ஞானத்தங்கம்
குருவில்லாசிஷ்யரடி. ௪௫

கட்டைதடியர்களும் கஞ்சாக்குடியர்களும்
மொட்டையடித்துக்கொண்டு ஞானத்தங்கம்
முழுச்சாமியானாரடி. ௪௬

ஆடித்திரிந்தவரும் அக்கிரமம்செய்தவரும்
பேடிப்பயல்களெல்லாம் ஞானத்தங்கம்
பெருஞ்சாமியானாரடி. ௪௭

சொல்லுங்குருக்களெல்லாம் சோற்றுக்கிடங்கொடுத்தால்
பல்லைத்திறப்பாரடி ஞானத்தங்கம்
பசையொன்றுமில்லையடி. ௪௮

கோமண ஆண்டிகள் கோடாகோடிப்புவியில்
காபணம்காட்டிவிட்டால் ஞானத்தங்கம்
கலைஞானம்சொல்வாரடி. ௪௯

கானகமும்மற்ற கடலேழ்கடந்தாலும்
ஞானிக்கிடையாதடி ஞானத்தங்கம்
நமக்கேன்கெருவமடி. ௫௦

கக்கத்தில்வேதம் கட்டிச்சுமந்தாலும்
அக்கரைச்சேருவது ஞானத்தங்கம்
அருமைதானகுமடி. ௫௧

பாதக்குறடும் பலமானதாழ்வடமும்
காதிற்கவசமெல்லாம் ஞானத்தங்கம்
கடைவழிகாட்டாதடி. ௫௨

காஷாயவஸ்திரமும் கையில்பிருதுகளும்
வேஷாதியுள்ளதெல்லாம் ஞானத்தங்கம்
வீண்பிலிக்காகுமடி. ௫௩

பூசுவதும் பூணுவதும் பூசனைகள்செப்வதுவும்
பேசுவதும்ஏசுவதும் ஞானத்தங்கம்
பேரின்பந்தாராதடி. ௫௪

ஆடுவதும்பாடுவதும் ஆளடிமைக்கொள்ளுவதும்
ஓடுவதும்தேடுவதும் ஞானத்தங்கம்
ஒருஜாண்வயிற்றுக்கடி. ௫௫

வல்லாளகண்டனென்று வாய்மதம்பேசுவதும்
இல்லாதையுண்டென்பதும் ஞானத்தங்கம்
எண்ஜாணுடம்புக்கடி. ௫௬

வீண்கோலங்காட்டி வெருத்தாரைப்போல்நீட்டி
ஆண்கோலங்கொண்டதினல் ஞானத்தங்கம்
ஆனபலனென்னடி. ௫௭

குருவையறியாமல் குருதொட்டுக்காட்டாமல்
கருவையறிந்தவர்போல் ஞானத்தங்கம்
கண்கெட்டுநின்ருரடி. ௫௮

புண்பட்டநெஞ்சரெல்லாம் புகைசெய்துபாஷாணம்
கண்கெட்டுப் போனவர்கள் ஞானத்தங்கம்
கண்க்கிலடங்காதடி. ௫௯

புல்லையுண்டாக்குதற்கு புருஷனொருவனில்லை
வெள்ளியுண்டாக்குதற்கு ஞானத்தங்கம்
வெகுபேரலைவாரடி. ௬௦

கும்பியழுக்கெடுக்க கோடிக்கொருவனில்லை
செம்பிலழுக்கெடுக்க ஞானத்தங்கம்
ஜெகமேயலையுதடி. ௬௧

கண்கெட்டவாதியெல்லாம் கண்டவிடந்திரிவார்
பண்பட்டவாதியைத்தான் ஞானத்தங்கம்
பார்க்கமுடியாதடி. ௬௨

வாதியரைப்புளுகன் மாந்திரிமுக்காற்புளுகன்
சோதிடம்சொல்பவன்முன் ஞானத்தங்கம்
சுத்தப்புளுகனடி. ௬௩

பூசாலியும்புளுகன் புலவன்பெரும்புளுகன்
ஆச்சாரியென்பவன்முன் ஞானத்தங்கம்
அண்டப்புளுகனடி. ௬௪

கூப்பிட்டழைக்குமுன்னே கூத்தாடும்தெய்வமெல்லா
காப்பாற்றமாட்டாதென்று ஞானத்தங்கம்
கருத்திலினைப்பாயடி. ௬௫

உடுக்கையடிக்குமுன்னே ஓடிவருந்தேவதைகள்
இடுக்கணகற்றுதடி ஞானத்தங்கம்
எல்லாம்வயற்றுக்கடி. ௬௬

பேயாடும்பேய்கள் பொல்லாதபேய்களடி.
சாராயப்பேய்களெல்லாம் ஞானத்தங்கம்
சஞ்சலம்தீர்க்காதடி ௬௭

ஆலமரதேவதைகள் அரசமரதேவதைகள்
சாலைமரதெய்வமெல்லாம் ஞானத்தங்கம்
சஞ்சலம்தீர்க்காதடி. ௬௮

ஆடுபலிகேட்கும் ஐயன்பிடாரியெல்லாம்
கூடுவிட்டுப்போமுயிரை ஞானத்தங்கம்
கொண்டுவந்துதாராதடி. ௬௯

தண்டுகமண்டலமும் தாவடமும்காவடியும்
கொண்டுசுமந்துவரும் ஞானத்தங்கம்
குடியரைநம்பாதடி. ௭௦

பெரியோரடையாளம் பார்க்கநிலவரமாம்
தெரியாமல்விட்டுவிட்டால் ஞானத்தங்கம்
திரும்பக்கிடைக்காதடி. ௭௧

முத்திகரைக்கு முந்தும்பெரியோர்கள்
சித்தம்நினைப்பதெல்லாம் ஞானத்தங்கம்
சிவமென்றிருப்பாரடி. ௭௨

கண்ணிற்படும்பொருளை கடவுளென்றேநினைப்பார்
மண்ணிற்பெரியோரெல்லாம் ஞானத்தங்கம்
மனத்துக்கடக்கமடி. ௭௩

மனத்தைப்பலிகொடுத்து மானத்தைச்சுட்டெறித்து
இனத்தைவெறுத்துவிட்டு ஞானத்தங்கம்
ஏழைபோல்நிற்பாரடி. ௭௪

குந்துவார்படுப்பார் குழந்தையைப்போல்கிடப்பார்
மந்திபோல்சேட்டைசெய்வார் ஞானத்தங்கம்
மகாத்துமாவானோரடி. ௭௫

சொன்னதையேசொல்வார் சுர்ரென்றெழுந்திருப்பார்
பின்னும்விழித்திடுவார் ஞானத்தங்கம்
பெரியோரடையாளண்டி. ௭௬

விழிப்பார்நெரிப்பார்கள் வெட்டெனத்திட்டிடுவார்
பழித்தால்சிரித்திடுவார் ஞானத்தங்கம்
பரமமெஞ்ஞானியடி. ௭௭

கூடயிருந்தாலும் கூப்பிட்டழைத்தாலும்
யாரையார்காண்பாரடி ஞானத்தங்கம்
யெல்லாம்பிரமமடி. ௭௮

மனத்தையடக்க மாளாதனேகஜெனம்
இனத்தைப்பிரிந்தாரடி ஞானத்தங்கம்
ஏற்றக்கோலாகுமடி. ௭௯

கடலைக்கடப்பனவும் கான்மலையிலேறுவதும்
உடலைவளர்ப்பதற்கே ஞானத்தங்கம்
உற்றுநினைப்பாயடி. ௮௦

கண்கட்டுமோடிகளும் கருவித்தைஜாலங்களும்
உண்ணுமுணவுக்கல்லால் ஞானத்தங்கம்
உயிர்த்துணையல்லவடி. ௮௧

கயற்றில்நடப்பதுவும் கரடிப்புலிமிருகம்
பயிற்றிநடிப்பதுவும் ஞானத்தங்கம்
பசியின்கொடுமையடி. ௮௨

ஊரூராயோடுவதும் உயர்ஞானம்பேசுவதும்
சோறும்துணிக்கேயல்லால் ஞானத்தங்கம்
சொர்க்கத்துக்கல்லவடி. ௮௩

கூலிக்கிஞானம் கொட்டியளப்பவர்கள்
வேலிக்கிமுள்ளதுபோல் ஞானத்தங்கம்
விட்டுப்பிரியாரடி. ௮௪

தன்னையறிந்தோர்கள் தலைவனைக்கண்டோர்கள்
உன்னைமதிக்காரடி ஞானத்தங்கம்
உலகத்தைவேண்டாரடி. ௮௫

தெய்வத்திருவழியே தேசவெளிச்சமென்று
மெஞ்ஞானம்சொல்லுவதால் ஞானத்தங்கம்
மெதுவாய்த்திரிவாயடி. ௮௬

நகர்வனஊர்வனவும் நடப்பனபறப்பனவும்
பகவான்விளையாட்டடி ஞானத்தங்கம்
பகையொன்றுமாகாதடி. ௮௭

பூண்டுகள்தாபரமும் பெரியவிருக்ஷமுதல்
ஆண்டவன்சிருஷ்டியடி ஞானத்தங்கம்
அழிப்பனவாகாதடி. ௮௮

தொட்டகுறையுடனே துடியாகமுன்னிழைத்த
விட்டகுறையிருந்தால் ஞானத்தங்கம்
மெஞ்ஞானங்கிட்டுமடி. அசு

ஊழானவூழ்வினையை ஒழித்தமெஞ்ஞானிகளும்
பாழானப்பெண்ணாசையால் ஞானத்தங்கம்
பல்லையிளிப்பாரடி. கூ0

சுடலைமெஞ்ஞானிமுதல் சுத்தமெஞ்ஞானிகளும்
விடலைப்பெண்கண்டுவிட்டால் ஞானத்தங்கம்
வேறெண்ணங்கொள்வாரடி. கூக

மெத்தநாள்யோகி மிகுஞானியானாலும்
சித்தினிப்பெண்ணைக்கண்டால் ஞானத்தங்கம்
சிலையவிழ்ப்பானடி. கூஉ

பெண்ணைத்துரந்தவர்கள் பூமியிலாருமில்லை
கண்ணன்கபாலிமுதல் ஞானத்தங்கம்
கட்டிச்சுமந்தாரடி. கூங

ஏரியிலேநீரிருந்தால் எவ்விடத்துப்பட்சிகளும்
சாரிவந்துசேர்வதுபோல் ஞானத்தங்கம்
சம்சாரவாழ்க்கையடி. கூச

பச்சைப்பயிரிடத்தில் பட்சிமுதல்மாமிருகம்
இச்சைவைத்து சேர்வதுபோல் ஞானத்தங்கம்
எல்லாம்வருவாரடி. கூரு

குணமில்லாவிட்டாலும் குலமில்லாவிட்டாலும்
பணமொன்றிருந்துவிட்டால் ஞானத்தங்கம்
பலபேருரவாமடி. கூசு

பணத்தைமதியாமல் பலயீனம்செய்யாமல்
குணத்தோடிருந்துவிட்டால் ஞானத்தங்கம்
கிட்டேநெருங்காரடி. கூஎ

உலகம்பணத்தாலே உரவும்பணத்தாலே
கலகம்விளைவதெல்லாம் ஞானத்தங்கம்
காசுபெருக்காலடி. கூஅ

காசுஇல்லாதொருவன் கடைத்தெருபோனாலும்
பேசுவாரங்கேதடி ஞானத்தங்கம்
இது-பூலோகவாழ்க்கையடி. ௯௯

பிணத்தைச்சுடும்புலைய பஞ்சமரானாலும்
பணத்தைத்திரந்துவிட்டால் ஞானத்தங்கம்
பழநாளுரவாமடி. ௧௦௦

அடுத்தஉரவானாலும் ஆடைகருத்திருந்தால்
தடுத்துநிருத்திடுவார் ஞானத்தங்கம்
தாட்சண்யம்பாராரடி. ௧௦௧

தானாப்பயலேனும் காப்புகொலுசிருந்தால்
வேணவணக்கமுடன் ஞானத்தங்கம்
வேண்டியழைப்பாரடி. ௧௦௨

அற்பசமுசாரம் அதற்குப்பலவிசாரம்
சொற்பமனிதரெல்லாம் ஞானத்தங்கம்
சொல்லிமகிழ்வாரடி. ௧௦௩

சொற்பசமுசாரம் சொன்னால்பலவிசாரம்
அற்பமனிதரெல்லாம் ஞானத்தங்கம்
ஆற்றித்திரிவாரடி. ௧௦௪

ஆற்றுப்பெறுக்கதுபோல் அதிகவரவிருந்தால்
போற்றிப்பணிந்திடுவார் ஞானத்தங்கம்
பொருளுள்ளமட்டுமடி. ௧௦௫

செல்வங்குறைந்துவிட்டால் சிலவுக்குக்காணாட்டால்
இல்லாளுந்தூருசொல்வாள் ஞானத்தங்கம்
யாரும்மதியாரடி. ௧௦௬

பிள்ளைமதியாது பெற்றோருமேசிடுவார்
உள்ளசினேகிதரும் ஞானத்தங்கம்
ஒதிங்கிப்போய்நிற்பாரடி. ௧௦௭

பணத்துக்கழுவார்கள் பலபொருளுக்கழுவார்
குணத்துக்கழுபவர்கள் ஞானத்தங்கம்
கோடிக்கொருத்தரடி. ௧௦௮

செத்தப்பிணத்தருகே சாகும்பிணங்களெல்லாம்
சுத்தியழுவதென்ன ஞானத்தங்கம்
சூட்சமுரைப்பாயடி. க0௯

ஆனைக்குதிரைகளும் அதிகாரமேன்மைகளும்
சேனைசிப்பந்தியெல்லாம் ஞானத்தங்கம்
சாம்போதுதவாதடி. கக0

ஆஸ்தியும்பாஸ்திகளும் அழகானகட்டடமும்
நீஸ்திதியானதெல்லாம் ஞானத்தங்கம்
பின்னேதுடராதடி. ககக

கொட்டிவைத்ததனமும் கோட்டைபோல்மாளிகையும்
பொட்டென்றுயிர்பிரிந்தால் ஞானத்தங்கம்
பின்னேதுடராதடி. ககஉ

இருக்குயசுர்சாமம் அதர்வணவேதமுதல்
திரக்கப்படித்தாலுமே ஞானத்தங்கம்
தீர்க்காயுளில்லையடி. ககங

தேடிவைத்தபொருளும் திரளானபந்துக்களும்
ஆடுமுயிர்போகையிலே ஞானத்தங்கம்
ஆறும்வரப்போரதில்லை. ககச

ஆதிமறைவேதம் அறுகோடிசாஸ்திரமும்
ஓதுங்குருக்கள்கூட ஞானத்தங்கம்
ஒழியத்தான்வேணுமடி. ககரு

பெண்டீரகத்துமட்டும் பிள்ளைசுடலைமட்டும்
கண்டஜெனங்களெல்லாம் ஞானத்தங்கம்
கடைத்தெருமட்டுமடி ககசு

ஆண்டிப்பரதேசி யதிதிகள்யேழைகட்கு
வேண்டிக்கொடுத்ததெல்லாம் ஞானத்தங்கம்
விட்டுப்பிரியாதடி. ககஎ

செட்டென்வாழ்ந்தாலும் செங்கோல்பிடித்தாலும்
இட்டதருமமட்டும் ஞானத்தங்கம்
என்றும்பிரியாதடி. ககஅ

தர்மம்அதர்மமென்று தாரணியிலேயிரண்டின்
மர்மம்தெரிந்துக்கொண்டால் ஞானத்தங்கம்
மாபுண்ணியவானுமடி ௧௧௯

எள்ளளவானும் இல்லையென்றுசொல்லாமல்
கிள்ளிக்கொடுத்திருந்தால் ஞானத்தங்கம்
கூடத்துடருமடி. ௧௨௦

உன்பசியைப்போலே உலகத்தில்ஏழைகளின்
தன்பசிதீர்த்திருந்தால் ஞானத்தங்கம்
தனக்குதுணையாமடி ௧௨௧

செல்வப்பெருக்காலே சீமையிலேழைகளை
மல்லுக்கிழுக்காதடி ஞானத்தங்கம்
மாளாநரகமடி. ௧௨௨

ஆதரவில்லாரை அடிமைகள்ஏழைகளை
வேதனைசெய்யாத்டி ஞானத்தங்கம்
வெகுமோசமாகுமடி. ௧௨௩

சூதைவிரும்பாதே சூதாடப்போகாதே
பூதலமாண்டோரெல்லாம் ஞானத்தங்கம்
பரதேசியானாரடி. ௧௨௪

நளச்சக்ரவர்த்தியுடன் நாடாண்டபுருருவனும்
துலையாதசூதாடியே ஞானத்தங்கம்
துரும்பாயலைந்தாரடி. ௧௨௫

தருமர்மனைவியுடன் தம்பிமார்நால்வர்களும்
கருமச்சூதாடியல்லோ ஞானத்தங்கம்
காட்டிலலைந்தாரடி. ௧௨௬

ஊற்றைச்சடலமிது உப்பிட்டபாண்டமடி
காற்றையடக்கிக்கொண்டால் ஞானத்தங்கம்
கற்பமிருப்பாயடி. ௧௨௭

கண்ணின்முன்னாலே காஷ்டத்தின்மேலே
எண்ணிறந்தோர்களெல்லாம் ஞானத்தங்கம்
யெரியுண்டுபோனாரடி. ௧௨௮

நீராயெரிப்பதென்று நேராகப்பார்த்திருந்தும்
போராட்டமேதுக்கடி ஞானத்தங்கம்
போர்க்கிடம்வேறேதடி. ௧௨௯

பேய்க்கும்சிலஞானம் பிடிப்பட்டுதானிருக்கும்
நாய்க்குமோர்ஞானமுண்டு ஞானத்தங்கம்
நமக்கேன்கெருவமடி. ௧௩0

உண்மையுரைப்போர்கள் உலகவிரோதியென்று
செம்மையாய்கேட்டிருந்தும் ஞானத்தங்கம்
ஜெகத்தில்நுழையாதடி. ௧௩௧

தவத்துக்கொருவரடி தமிழுக்கிருவரடி
சவத்துக்குநால்வரடி ஞானத்தங்கம்
ஜெகத்தின்வழக்கமடி. ௧௩௨

உண்மையுரைக்கா்தே உலகத்தையேசாதே
தண்மைபெருக்காதடி ஞானத்தங்கம்
தப்பித்திரிவாயடி. ௧௩௩

பொய்யரைச்சேராதே புலவரைசீராதே
செய்யாதகாரியத்தை ஞானத்தங்கம்
செய்யநினைக்காதடி. ௧௩௪

அற்பரைச்சேராதே ஆளடியைச்சீராதே
சொற்பபிழைகட்கெல்லாம் ஞானத்தங்கம்
சிரிமுனியாதடி. ௧௩௫

தெய்வமிகழாதே தீனரையேசாதே
பொய்மொழிபேசாதடி ஞானத்தங்கம்
பெருமோசமாகுமடி. ௧௩௬

கற்றதுகையளவு கல்லாதுலகளவென்
றுற்றுநினைப்பாயடி ஞானத்தங்கம்
உலகம்பலவிதண்டி ௧௩௭

கனிரசம்தேன்பாகு கற்கண்டுசேர்ந்தாப்போல்
முனிசாமிசொன்னதெல்லாம் ஞானத்தங்கம்
முதியோர்வெருக்காரடி. ௧௩௮

மேஞ்ஞானத்தங்கம் முற்றிற்று.